திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : நீங்கள் எக்ஸ்பஞ்ச் செய்ததற்குப் பிறகு அது ரிக்கார்டில் இருக்கக் கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. உமாநாத் அவர்கள் சொல்லியிருப்பதும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட வேண்டும் என்று உத்தர விடுகிறேன்.

பாண்டியாறு—புன்னம்புழா திட்டம்.

*வினா எண். 25—திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாண்டியாறு—புன்னம்புழா திட்ட செயலாக்கம் எந் நிலையில் உள்ளது ?

(ஆ) அத்திட்டம் எப்போது நிறைவேறும் ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:

(அ) அண்டு (ஆ) : இத்திட்டம் பற்றி கேரள மாநில அரசுடன் மேற்கொண்டு பேச்சுவார்த்தைகள் நடத்தி முடிவெடுக்கப்படும்.

திரு. தி. கா. நல்லப்பன் : கோவை மாவட்டத்தில் ஒரு பகுதி, பெரியார் மாவட்டத்தில் ஒரு பகுதி வறட்சிப் பகுதிகளாக இருக்கின்ற காரணத்தால் இத்திட்டம் நிறைவேற உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேச்சுவார்த்தைகளுக்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். அது வெற்றிகரமாக முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. கு. ரமணி : பாண்டியாறு—புன்னம்புழா திட்டம் திட்டக் கமிஷனால் 1965ல் நிர்ணயிக்கப்பட்டது. அது பாசன வசதிக்காக நிர்ணயம் செய்யப்பட்ட திட்டமா ? அல்லதுமின்சார உற்பத்தி நமக்கு அதிகமாகக் கிடைப்பதற்காக போடப்பட்டுள்ள திட்டமா? மின்சார உற்பத்திக்காக போடப்பட்ட திட்ட

என்றால் மின்சாரப் பற்றாக் குறை இன்று இருப்பதைத் தீர்க்க அத்திட்டத்தைப் பற்றி உடனடியாக முடிவு எடுக்கப்படுமா? அல்லது பாசன வசதி என்றால் பாசன வசதி கிடைக்கும்படி விரைவில் ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: முதலில் நீர் மின் திட்டத்திற்காக ஒரு ஒப்பந்தம் போடப்பட்டது. பிறகு கோவையில் இருக்கக் கூடிய விவசாயிகள் நீர்ப்பாசனத்திற்காக நீர் வேண்டும் என்று வலியுறுத்தியதின் விளைவாக அந்தத் திட்டத்தை மறுபரிசீலனை செய்து நீர்ப்பாசனத்திற்கும் பயன் படுத்த வேண்டும் என்று சொல்லி நாம் கேரள அரசைக் கேட்டிருக்கிறோம். நம் ஆட்சி வந்த காலத்திலும் சரி நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும் அன்றைய நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்களும் எல்லோரும் பேச்சுவார்த்தைகள் நடத்தியிருக்கிறார்கள். இரண்டுக்கும் பயன்படுத்துவது பற்றித் தான் இப்போது அரசாங்கம் யோசித்துக் கொண்டிருக்கிறது.

திரு. எம். சின்னராஜ்: கோவை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் அவினாசி, கோவை தாலுகாக்கள்தான் எந்தவிதமான நீர்ப்பாசன வசதியும் இல்லாமல் இருக்கின்றன. இத்திட்டம் பற்றி நீண்ட நாட்களாகப் பேசப்பட்டு வருகிறது. இந்தத் திட்டம் நிறைவேறுமா என்ற சந்தேகம் கூட மக்களிடம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே குந்தா கழிவு நீர்த் திட்டத்தை, இரண்டு தாலுக்காக்களுக்கும் குறைந்தபட்ச நீர்ப்பாசன வசதியை ஏற்படுத்தும் வகையில் அரசு திட்டமிட்டு செயல் படுத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9.20.]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, கோவை, அவினாசி வட்டங்களுக்கு நீர்ப்பாசன வசதியைப் பெற்றுத் தருவதற்கு இப்போது ஒரு ஆய்வு நடத்திக் கொண்டிருக்கிறோம். அந்த அறிக்கை கிடைத்தவுடனே நிச்சயமாக இந்த இரண்டு வட்டங்களும் நீர்ப்பாசன வசதி பெறத்தக்க அளவுக்கு சில முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. தி. கா. நல்லப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, இத் திட்டத்தால் எத்தனை ஏக்கர் நிலம் பயன்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டால் கோவை மாவட்டம் முழுவதும் அல்லது எத்தனை மாவட்டங்கள் இதனால் பயன் பெறும் அது மட்டுமல்லாமல் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான நடவடிக்கையும் இந்தத் திட்டத்தின் மூலம் நிறைவேறுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக முடிந்தவுடனேயே எல்லாத் திட்டங்களும் நிறைவேற்றப்படும்.

'மால்கோ' நிறுவனத்திடம் உள்ள மின்கட்டண நிலுவை.

*கு.கா.வி. எண். 28—திரு. உ. சுப்பிரமணியன், திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அலுமினியம் உற்பத்தி செய்யும் 'மால்கோ' ஸ்தாபனம் கட்ட வேண்டிய மின்சார கட்டண பாக்கி சுமார் ஒன்பது கோடி ரூபாய் வசூலாகாமல் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், மேல் நடவடிக்கை என்ன எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) ஆம்.

(ஆ) மின் கட்டண நிலுவைகளைச் செலுத்தாவிட்டால் மின் இணைப்பு துண்டிக்கப்படுமென 'மால்கோ' நிறுவனம், 1977 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் எச்சரிக்கப்பட்டது. ஆனால் மின் வாரியம் மின் இணைப்பை துண்டிக்க முடியாதபடி உயர்நீதி மன்றத்தின் மூலம் கம்பெனி 14—9—1977 அன்று தடை உத்திரவு வாங்கியுள்ளது. வழக்கு நீதிமன்றத்தின் பரிசீலனையில் உள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே 9 கோடி ரூபாய் வசூலாகாமல் பாக்கியுள்ளது. இந்தக் கேள்வி பத்திரிகைச் செய்தியின் அடிப்படையிலே கேட்கப்பட்ட கேள்வி. தற்போது மொத்த பாக்கி எவ்வளவு இந்த நிறுவனம் அரசு மின்சாரத் துறைக்கு தரவேண்டும், எத்தனை ஆண்டுகளாக இந்த பாக்கி இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ? இப்படி கோர்ட்டுக்குச் சென்று தடை வாங்கினால் எப்போது முடிவு காண்பது ?